www.Padasalai.Net www.TrbTnpsc.com

**11** Register No.

# இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2024

## பொருளியல்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

### பகுதி – அ

I. பொருத்தமான விடையை தெரிவு செய்யவும். 20 x 1 = 20

1. தொன்மைப் பொருளாதாரத்தின் தந்தை யார்?
அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஆடம் ஸ்மித் இ) கார்ல் மார்க்ஸ் ஈ) பால் அ சாமுவேல்சன்

2. கீழ்க்கண்ட வாய்ப்பாட்டின் மூலம் இறுதி நிலை பயன்பாட்டை அளவிடலாம்.
அ) $TU_n - TU_{n-1}$ ஆ) $TU_n - TU_{n+1}$ இ) $TU_n + TU_{n-1}$ ஈ) $TU_n - TU_{n+1}$

3. குறுகிய கால உற்பத்தி சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது?
அ) விகித விளைவு விதி ஆ) மாறும் விகித அளவு விளைவு விதி இ) சம அளவு உற்பத்தி கோடு ஈ) தேவை விதி

4. ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது கிடைக்கும் உற்பத்தி
அ) இறுதிநிலை உற்பத்தி ஆ) மொத்த உற்பத்தி இ) சராசரி உற்பத்தி ஈ) ஆண்டு உற்பத்தி

5. ஓர் அலகு உற்பத்திக்கான செலவு..........செலவாகும். அ) சராசரி ஆ) இறுதிநிலை இ) மாறும் ஈ) மொத்த

6. முற்றுரிமை நிறுவனம் குறுகிய காலத்தில்..........பெறும்.
அ) இயல்பு இலாபம் ஆ) நஷ்டம் இ) அதிக லாபம் ஈ) அதிக நஷ்டம்

7. நிறைவுப் போட்டியில் நிறுவனத்தின் தேவைக்கோடு..........
அ) நிலையானது ஆ) படுக்கிடை இ) எதிர்மறை சரிவு ஈ) நேர்மறை சரிவு

8. பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) உற்பத்தி விலைக் கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு இ) கூலிக் கோட்பாடு ஈ) வட்டிக்கோட்பாடு

9. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை வழங்கியவர்..........
அ) ஹாலே ஆ) சும்பீட்டர் இ) கீன்ஸ் ஈ) நைட்

10. எந்த ஆண்டில் இந்திய மக்கள் தொகை 100 கோடியைத் தாண்டியது? அ) 2000 ஆ) 2001 இ) 2005 ஈ) 1991

11. பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமர்த்தியா சென் பெற்ற ஆண்டு..........
அ) 1998 ஆ) 2000 இ) 2008 ஈ) 2010

12. மஞ்சள் புரட்சி என்பது
அ) எண்ணெய் வித்துக்கள் ஆ) முட்டை உற்பத்தி இ) உருளைக்கிழங்கு ஈ) பெட்ரோலியம்

13. 1993 ல் முன்பதிவு நீக்கப்பட்ட தொழில்துறை
அ) இரயில்வே துறை ஆ) செம்பு மற்றும் சிங்க் சுரங்கத் தொழில் இ) அணு ஆற்றல் ஈ) அணு கனிமங்கள்

14. அரசு தனது சொத்தை விற்பது அ) முதலீட்டு குறைப்பு ஆ) தொழில் உரிமம் விலக்கு இ) வெளிநாட்டு நேரடி முதலீடு ஈ) வெளிநாட்டு தனியார் முதலீடு

15. GST யில் அதிகபட்ச வரிவிதிப்பு ..........ஆகும். (ஜூலை 1, 2017 நாளின்படி)
அ) 18% ஆ) 24% இ) 28% ஈ) 32%

16. இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்புடுத்தி குறிப்பது
அ) நட்பம் ஆ) சார்ந்திருப்பு இ) இரட்டை தன்மை ஈ) சமமின்மை

17. இந்தியாவில் உள்ள ஊரக குடும்பங்களில் கடனாளிகளின் பங்கு எவ்வளவு?
அ) பாதியளவு ஆ) நான்கில் ஒரு பங்கு இ) மூன்றில் இரண்டு பங்கு ஈ) நான்கில் மூன்று பங்கு

18. நீர்ப்பாசனத்தின் முக்கிய ஆதாரம் அ) அணைக்கட்டுகள் ஆ) கால்வாய்கள் இ) கிணறுகள் ஈ) குளங்கள்

19. காற்றழுத்த விசைக்குழாய் நகரம் அ) திருப்பூர் ஆ) கரூர் இ) சிவகாசி ஈ) கோயம்புத்தூர்

20. மொத்த தேவைச் சார்பிற்கும் $17x + y = 5$, $x - y = 3$ என்றால் x ன் மதிப்பு ..........ஆகும்.
அ) 4 ஆ) 3 இ) 16 ஈ) 8



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

பகுதி – ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்கவும். வினா எண்.3
விடையளிக்கவும்.

21. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.
22. விலைத்தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி.
23. உழைப்பு – வரையறு.
24. வாங்குவோர் முற்றுரிமை என்றால் என்ன?
25. இலாபம் என்றால் என்ன?
26. குடிசைத் தொழில் – வரையறு.
27. LPG கொள்கையை செயல்படுத்த காரணம் என்ன?
28. குறு நிறுவனங்கள் – வரையறு.
29. MS Word ன் முக்கிய அம்சங்கள் யாவை?
30. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் நான்கினை எழுதுக.

பகுதி – இ

III. எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளிக்கவும். வினா எண்.4
விடையளிக்கவும்.

31. 'என்ன உற்பத்தி செய்யவேண்டும்' என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை?
32. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
33. காப் – டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக.
34. AC மற்றும் MC எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
35. பிழைப்பு மட்டக் கூலிக் கோட்பாட்டை சுருக்கமாக விவரி.
36. பெருக்கி கருத்தைப் பற்றி V.K.R.V. ராவின் பங்களிப்பை எழுதுக.
37. காலனி ஆதிக்கத்தின் போது இந்தியாவில் நடைமுறையில் இருந்த பல்வேறு நில உடைமை
தெளிவுபடுத்துக.
38. ஊரக வேலையின்மையின் வகைகள் யாவை?
39. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி.
40. MS Excel Sheet செயல்படுத்துவதில் உள்ள நிலைகளை விளக்குக.

பகுதி – ஈ

IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

41. அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. (அல்லது)
ஆ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.
42. அ) கீன்சின் வட்டிக் கோட்பாட்டை விவரி. (அல்லது)
ஆ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குளை விவரி.
43. அ) நிறைவு போட்டியின் இயல்புகளை விளக்குக. (அல்லது)
ஆ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.
44. அ) குறுகிய காலச் செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரி. (அல்லது)
ஆ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி.
45. அ) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை – விவாதி. (அல்லது)
ஆ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.
46. அ) இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரி. (அல்லது)
ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.
47. அ) பொருளாதார முன்னேற்ற கருத்துகளில் ஜவஹர்லால் நேருவின் பங்கை வெளிக்கொணர்க
ஆ) இறுதிநிலை உற்பத்தித் திறன் பகிர்வுக் கோட்பாட்டை விளக்குக.



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com